ஓலை 44 | ஓசை 153 | மடங்கல்(ஆகத்து) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு.**

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின்
நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல்
போற்றுவர் பெரியோர்.

**Translation:**

Through all seven worlds, in seven-fold birth,
Remains in mem'ry of the wise
Friendship of those who wiped on earth,
The tears of sorrow from their eyes.

**Explanation:**

(The wise) will remember throughout their seven-fold births the love of those who have wiped away their affliction.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
# இலக்கியப் பேரவை

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நன்மை கடைப்பிடி

**பா வகை:இருமுச்சீரிரட்டை வியநிலைச் சிந்து**

அறத்தில் விழைவது - நன்மையே
அகத்தில் நீயுமே கடைப்பிடி
இறைமை போற்றிட - நல்வழி
ஈயும் பொழுதினில் வருமடி

இடர்கள் ஆயிரம் - வந்தாலும்
இனிய அறத்தினை தொடர்ந்திடடி
உடையா இரும்பென - உன்நெஞ்சும்
உறுதி கொண்டுதான் செய்திடடி

பலனை எதிரும் - பார்க்காமல்
பழைய கதைகள் பேசாமல்
வலிமை ஊட்டு - மறவாமல்
வழிகள் பிறக்கும் கேளாமல்




மீண்டும் மீண்டும் - நற்செயலை
மீட்டும் பழக்கம் வளமாக்கும்
வேண்டும் வேண்டும் - என்றேதான்
வேள்வி ஒன்றை தானீர்க்கும்

கொடுக்கும் மனமே - அருளாகும்
குன்றாப் புகழை அதுவழங்கும்
தடைகள் வந்தே - தடுத்தாலும்
தகர்க்கும் ஆற்றல் தகவாக்கும்

மண்ணில் பிறந்த - நாளன்றே
மரணம் அதுவும் நிலையாச்சே
எண்ணும் எண்ணம் - சிறந்தாலே
ஏற்றம் பூக்கும் செயலாலே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

அகர முதல

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நண்பன்

## அந்தாதிக் கவிதை

உறவைத்தாண்டி உதிரமற்று இணைந்திட்ட கரங்கள்.
கரச்சேர்க்கை கவலைகள் களையும் மகத்துவம்.
மகத்துவத்தில் மாண்புகள் கூட்டும் மனிதம்.
மனிதத்தில் இன்பப்பாதைகள் விதைக்கும் நட்பு .
நட்பின் வரலாற்றில் நம்பிக்கை இழை.
இழையெடுத்து தன்னை ஒப்படைக்கும் கடவுள்.
கடவுளின் வரமென மனங்களில் புன்னகை.
புன்னகையில் விழைந்திட்ட நட்பின் வெளிச்சம்.
வெளிச்சத்தில் விரிகின்றன விசாலமான பார்வைகள்.
பார்வைகளின் உன்னதத்தில் சங்கமிக்கும் மனங்கள்.
மனங்களுக்குள் எழுவதில்லை பிழைகொண்ட பிணக்குகள்.
பிணக்குகள் சேராமல் பிரியமாகும் தோள்கள்.
தோள்களில் புன்னகை சுமக்கிறது பெரும்பாரம்.
பாரமென எண்ணாமல் ஒன்றாகும் சிந்தனைகள்.
சிந்தனையின் நீட்சியிலே நட்பேயாகிறது உறவென.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# இரட்டைக் கிளவி

சட சடவென மரம் முறிய
கிடு கிடுவென கிழவன் வர
வழ வழவென பேசிய வார்த்தை
திபு திபுவென கூட்டம் கூட
சிலு சிலுவென தென்றல் காற்றோடு
பளிச் பளிச்சென மின்னல் வெட்ட
பட படவென மழை பெய்ய
சல சலவென ஓடையில் நீர்
கட கடவென நிறைந்து வெளியேற
குசு குசுவென ஊரார் பேச
விக்கி விக்கி  நிற்கையில் தண்ணீரோடு
நங்கு நங்குவென பாட்டி வந்திட
கடு கடுவென பேசி தீர்க்கையில்
லொட லொடவென தாத்தா அழைக்கையில்
கொழு கொழுவென குழந்தையை பார்க்கையில்
கல கலவென மகிழ்வோடு சிரிக்கையில்
திடு திடுவென பேரன் வந்தான்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மகிழம் பூ

பச்சை வனத்தில்
இச்சையுடன் மலரும்.

சின்ன மலரில்
எங்கும் நிறைமணம்.

உருவு கண்டு
எள்ளாமை வேண்டும்.

மனிதரிலும் அவ்வகை
இனம் உண்டு.

மலர மணம்
பரப்பும் மகிழம்பூ

காயும் நிலையிலும்
சாயாது அதன்மணம்.

நாம் உலகில்
வாழப் பிறந்தோம்.

நாம் மறைந்தாலும்
நம்புகழ் நிலைத்திட

நாளும் நற்செயல்
புரிந்திட வேண்டும்.

தோன்றிற் புகழொடு
தோன்றுக என்ற

வள்ளுவர் குறளை
உள்ளிட வேண்டும்.

இன்முகத்தோடு நாளும்
இன்சொல் பேசிட

கைம்மாறு கருதாது
இரந்தோர்க்கு உதவிட

மனிதநேயம் கொண்டே
மாண்போடு வாழ்ந்திட



குணமெனும் குன்றேறி
நின்றிடல் நன்று.

சிறிய செயலிலும்
சீர்த்தி பெறலாம்.

உடற்பிணி போக்கும்
மருத்துவ மகிழமாய்

பகிர்ந்துண்டு நாமும்
பசிப்பிணி போக்கிட

இயன்றவரை உதவுவோம்
இன்னல் வந்துற

சோர்ந்து போகாது
உழைத்தே உதவுவோம்

பிறப்பு
சம்பவமானால்
இறப்பைச்
சரித்திரம்

ஆக்கிட நாமும்
அல்லவை நீக்கி

நல்லதைச் செய்வோம்.
இசைபெற வாழ்வோம்.


கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# பாரியன்பன் நாகராஜன் – கவிதைகள்

தாயின் மீது
கொண்டிருந்த பாசம்
சகோதரியின் மேல்
வைத்திருந்த அன்பு
மனைவியின்பால்
எனக்கிருந்த காதல்
மகளிடம்
கொண்டிருந்த நேசம்
என
ஆக மொத்தத்தையும்
தனியொருத்தியாய்
வாரிச் சுருட்டிக் கொள்கிறாள்
எனது பேத்தி அவந்திகா.

/

அருகிலிருக்கும்
எதையும் மிச்சம் வைக்காமல்
மொத்தமாய் எரிகிறது தீ.
தானும் எரிந்து
சாம்பலாகிக் கொண்டிருக்கிறான்
சிவன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# என் இனிய தனிமையே!

உறவுகளும்
நட்புக்களும்
என்னுடைய
மகிழ்வான தருணங்களில்
மட்டுமே உடனிருந்தன.
நான்
கவலையில்
மூழ்கி கிடந்தபோது
எல்லாமே விலகிவிட்டன.
அப்போது
என்னை விட்டுப்
பிரியாமல் இருந்தது
நீ மட்டும் தான்.
என்னை யாரென்று
எனக்குப் புரிய
வைத்ததும் நீதான்.
இதற்கு
நானென்ன கைமாறு
செய்யப்போகிறேனென்று
தெரியவில்லை.
ஆனால்
எனது துன்பங்கள்
தீர்ந்தபிறகும்.
எனது குறைகளெல்லாம்
நிறைகளாக
மாறியபிறகும்.



என்னைத் தேடி
வசதியான வாழ்க்கை
வந்தபிறகும்.
உன்னுடனான பயணத்தை
நிச்சயமாக
தொடர்வேனென்ற
உறுதியை மட்டுமளிக்கிறேன்.
ஏனெனில்
நான்
நன்றி கெட்டவனல்ல.

கவிஞர் பாக்யபாரதி,தருமபுரி

# பதிவுகள்

கடந்தகால நினைவுகளை
கண்முன்னே காட்சிப்படுத்தும்
பொக்கிஷம்!
நம் வரலாற்றின் தொன்மையை
முன்னோர்கள் வாழ்க்கையை
பதிவு செய்யும் பதிவுகள்!
கடந்தகால பெருமை சொல்லும்
வானுயர்ந்த கோவில் கோபுரங்கள்
வர்ண வர்ண சித்திரங்கள்!
ஆன்மீகமும் கலையும்
கல்வெட்டுகள் வாயிலாக அறிய
மன்னர்கள் பதிவு செய்த சான்றுகள்!
இன்று விஞ்ஞான வளர்ச்சியில்
கணினியில் சேமித்து வைக்கும் தரவுகள்
அனைத்துமே அடுத்த தலைமுறையினர்
அறிந்து கொள்ள
உதவும் செறிவான பதிவுகள்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# பட்டாம் பூச்சியும் நானும்

விரல்களுக்கு அகப்படாத
பட்டாம் பூச்சி
பறக்கிறது பார்வைக்கு அகப்பட்டடு
அவ்வப்போது.

காதுகளில் கேட்காத
அதன் சிறகோசைகள்
மறைந்து போகின்றன
விடியலின் தென்றல் காற்றோடு



ஒரு பறக்கும் பூவாய்
வாடாத வண்ணங்களுடைய
சிறகுகளில் காற்றில் கலந்துவிட
நறுமணங்கள் இல்லை.

சிமிட்டும் சிறகுகளுடன் தேனுண்ண
பூக்களில் அமரும் பூவாய்
பூமீது அமர்கிறது
பூவையிவள் மனதை
இறுகப் பற்றிக் கொண்டு.

நொடிகளாய் வழியும்
எனது நிமிடங்களையும்
மனதையும்
சிறைப்படுத்திச் சென்ற
வண்ணத்துப்பூச்சியின்
வண்ணங்கள் ஒட்டி இருக்கின்றன
என் பார்வைகளில்

வண்ணத்துப் பூச்சியாய்
வண்ண வண்ணமாய்
செட்டைகள் கொண்ட சட்டைகள்
பாதணிகள் அணிவித்து எனை
அழகு பார்த்த ஞாபகம் வந்து
கண்களை நனைக்கின்றது

மீள்தல்கள் வண்ணவண்ணமாய்
செட்டை விரிக்கின்றன
மாளாத நினைவுகளோடு.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# என் செய்வேனோ!

வானத்தில் வரைந்து விட்ட
வானவில்லாய் நீ இருந்தால்
உன்னை வந்து சேர
நானும் என் செய்வேனோ

இருள் வானில் பூத்திருக்கும்
நட்சத்திரக் கூட்டத்தினுள்
உன்னை கண்டு கொள்ள
நானும் என் செய்வேனோ

அகலியின் மையத்தில்
சிற்பிக்குள் முத்தாக நீ பிறந்தால்
உன்னை தேடிட நானும்
என் செய்வேனோ

வீசிடும் காற்றில் நீ
கவிதையின் மொழியானால்
உனை வேராக்கிட நானும்
என் செய்வேனோ

தெரியவில்லை புரியவில்லை
உன்னை கண்டு கொள்ளத்தான்
வலிக்குதடா உடைகின்றேனடா
உன்னை வந்து சேர்ந்திடத்தான்
தாமதம் வேண்டாமே அன்பே
நீயே என்னிடம் வந்து சேர்ந்து விடு



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# பெண்ணே கவனம்

சின்னச் சின்னப் பிள்ளைங்க
சிங்காரமாய் நடக்கத்தான் முடியலைங்க!
சின்ன புத்தி உள்ளவங்க
சித்ரவதை பண்றாங்க!

பாரதி கண்ட புதுமைப் பெண்களை
பாவிப் பயலுக விடலையே!
பாழடைஞ்ச வீடாட்டம்
பந்தாடி விடுறாங்களே!

கோபப்படும் புள்ளைங்களை எல்லாம்
கொன்னு தான் வீசறானுக!
இரக்கமில்லா மனித ஜென்மம்
இறந்தாலும் விடுறதில்லை!

அண்ணான்னு சொன்னாலும் விடலையே
ஆணவமும் தான் தலைக்கேறுதே!
ஆணும் சரி பெண்ணும் சரி
அவனுக்கு தேவைனா அன்னைக்கே வேணுமாம்!

பாசமாப் பேசுற மாதிரி
பக்கத்துல வந்தாக் கூட!
பறந்து நாம போயிரனும்
பச்சைக் கிளிகளாட்ட!

நெருங்கித் தான் வந்தாலும்
நெருப்பை அள்ளி வீசிடணும்!
நெருப்பில்லைனா மண்ணுதான் இருக்குதே
நெருப்புக் கோழியாய் நீ இருக்கணும்!

சந்தடி சாக்குல வந்து தொட்டு
சாந்தமாப் பேசுறவங்களை!
சத்தம் போட்டு ஊரைக் கூட்டி
சந்தி சிரிக்க வெச்சுரணும்!

ஒருதலைக் காதலுக்காக
ஒன்னையே கொன்னுடுவாங்க!
பாவமாப் பேசுற மாதிரி
பாலியல் தொல்லையும் தந்திடுவாங்க!



நெஞ்சில் நீ தைரியத்துடனே
நேர்மையாய் வலம் வந்து!
முகஸ்துதிகளை நீ நம்பாமல்
முன்னேறிச் சென்றிடு தங்க மகளே!

அன்பாப் பேசுற மாதிரி
அழகான உடை உடுத்தி!
அலங்காரம் பல பண்ணி
அழகே அழகேன்னு உருகுறவுங்களை!

அன்பும் வேண்டாம் ஆசையும் வேண்டாம்
அம்மா அப்பா போதுமுன்னு!
அசாதாரணமா நெஞ்சையும் நிமிர்த்தி நின்னா
அகிலத்துல உன்னை வெல்லத்தான் யாரிருக்கா!

ஹரப்பா கூட்டிட்டுப் போறேம்பான்
ஹார்மோன் சுரப்பியின் மாற்றத்துல!
சரின்னு சொல்லிப் போயிடாத அப்புறம்
சத்தம் இல்லாம உன்னை முடிச்சிருவான்!

முகத்தைப் பார்த்துப் பேசுறானா
முத்தத்துக்காக அலையுறானா!
முந்தி விரிக்கத் துடிக்கிறானா இல்லை
முழுசும் நீயேன்னு பிணாத்துறானா!

அம்மா அப்பா பெத்த அழகுப் புள்ள
அடுத்தவன் பேச்சை நீ நம்பாத!
உன் முடிவு உன் கையில்
உணர்ந்தால் என்றும் உனக்கு நலமே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# கிளிஞ்சல் கலங்கரை

சமுத்திரத்தின் பேரலை
ஆழி கருங்கடலின் நிலை
வர்ணிக்க முடியாத வண்ணம்
மணல் திட்டின் கிண்ணம்
கிளிஞ்சல்களின் சின்னம்
மீனவன் கையோடு
ஆழிக்கடலில்
மூச்சும் முரண்பாடு
முத்தமிடும் கடற் உயிரின மெய்ப்பாடு
ஏழைகளின் சுவடு
பாகுபாடாக தகடு
இசையின் ரகம்
கிளிஞ்சல்களின் சுகம்
அழகின் எல்லை
கடற்கரையின் பிள்ளை
கிளிஞ்சல்களே தில்லை



கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# ஹைக்கூ கவிதைகள்

1
கழுகின் கால்கள்
விடாப்பிடியாகப் பற்றியபடி
சுற்றிக் கொள்ளும் பாம்பு
2
அலகால் கொக்கு
குறி பார்த்துக் கொத்தியதோ?
பிறை நிலவை
3
தனியார் தொலைக்காட்சிச் சேவை
செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில்(AI)
செய்தி வாசிக்கும் பெண்
4
கொண்டுவந்தான் விளையாட
குட்டிப்பையன் சட்டைப்பையில்
இரண்டு பூனைக்குட்டிகள்
5
நதிநீரில்
வளர்ந்து இருக்கிறது
மரத்தின் நிழல்
6
வீழ்ந்ததும் வருந்தாதே
எத்தனையோ மனிதர்க்கு
நிழலைத் தந்திருப்பாய் மரமே
7
வரப்பில் நிலா வெளிச்சம்
ஊர்ந்து விரையும்
சிறு அரவங்கள்



1
eagle's feet
holding tenaciously
circling snake.
2
whether the egret
pecked aiming at
crescent moon.
3
service of private TV
artificial intelligence in technology
lady news reader.
4
he brought to play with
in his shirt pocket
two kitten.
5
in river water
be grownup
tree's shadow.
6
don't worry for having fallen down
you might have offered shadow
to many people Oh tree.
7
moonlight on field ridge
be creeping fast
tiny snakes.

Trans: Bommidi Mohandoss.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர் இலங்கை

# கலைச்சொற்களோடு கவிபாடு

கலைச்சொல் அறிவோம்

அறன் வழி செல்வது ஜெயம்
அறனை பின் பற்றாதோர் வழி அஞ்சம்
அறனே வழி காட்டும் ஆயுதம்
அறனால் பெறுவாய் நித்தம் ஆனந்தம்

ஆதுரம்(அவா) வந்தால் அழிந்திடும் வாழ்வு
ஆதுரம்(நோய்) வந்திட முன் காத்திடு
ஆதுரம் காட்டிட வேண்டும் ஏழைகளிடம்
ஆதாரமே மனித குணத்தில் உயர்வே

இருடியான வாழ்க்கையில் வெளிச்சம் வந்திடவே
இருடில் வெளிச்சத்தில் உழைத்திட வேண்டும்
இருடி கொண்டது படிக்காதவனின் வாழ்க்கை
இருடி அகளும் படித்தவனின் வாழ்க்கையில்

உலகமாய்(பாம்பு) மாறி கொத்திடும் துரோகி
உலகமாகி(இணை)போகும் நற்குணத்தால் மதங்கள்
உலகத்தில் (பூமி) வெல்லலாம் முயற்சியோடு போரிடானாலே
உலகம்( பூமி) போற்றிடும் நல்லவனாய் வாழ்ந்தாலே

ஊளியோடு(பசி)இருப்போருக்கு வழங்கிடு உணவு
ஊளியாக(பசி)இருப்பவனே முன்னேறிடுவான் வாழ்விலே
ஊழியோடு  மன ஏமாப்பு சேர்ந்தாலே
உலகம் காலடியில் கிடக்க வைத்திடுமே

எல்வழி இறைவன் சாபமாய் வந்திடுமே
எல்வளியால் அழிந்திடும் பயிர் நிலங்களே
ஓர்ந்து பார்த்தாலே உண்மை வெளியாகுமே
ஓர்ந்ததால் நீதி நிலையாக ஆகுமே

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# சிலப்பதிகாரம் (நான்கு)

4. அந்தி மாலைச் சிறப்பு செய்த காதை

1. அந்திப் பொழுது
பகல் மறைய மறைய இரவு எட்டிப் பார்க்கிறது பூமியை
நகல் எடுத்தது போல் மந்தகாசமான ஒளி புவி எங்கும்
தகவல் சொல்லுகிறது ஊதல் காற்று மூலமாக பூமிக்கு
முகவரி எழுதுகிறது, '' இது ஒரு அந்தி மாலைப் பொழுது.''

இல்லத்தரசிகள் துணைவனோடு மகிழும் அந்தி மாலை
இல்லாதவர் அவனை நினைத்து நொந்து நூலாகும் மாலை
நல்ல மன்னராட்சியில் மக்கள் கொண்டாடும் அந்தி மாலை
அல்லாத அரசாட்சியில் துன்புறும் மக்களின் அந்தி மாலை




2. கோவலனும் மாதவியும் மகிழ்ந்து வாழ்தல்
அந்தி வானில் வெண்பிறை புகார் நகருக்குள் நுழைந்தான்
சிந்தாமல் சிதறாமல் முல்லை மல்லிகை மலர்கள் மலர்ந்தன
அந்த வாசனையில் மயங்கி மாதவி கோவலனை தழுவினாள்
வந்த கோவலன் அவள் இறுக்கத்தில் தன்னை மறந்தான்

3. கண்ணகியும் அந்தி மாலையும் :
மன்னவன் இல்லாத மாளிகையும் மஞ்சமும் அனல் பறந்தது
தென்னவன் நினைவில் அவள் மார்பில் மங்கள நாண் மட்டும்
என்ன என்னவோ சொன்னானே ''மாசறு பொன்னே ,'' மறந்தானே
கன்னத்தில் நீர் வழிய தினம் அந்தி மாலை கருவேலங் காடானது ?

4.இரவுப் பொழுதில் மன்மதன் ;
கரும்பு வில் ஏந்தி மன்மதன் ரதியுடன் இரவு நகர் வலம் வருவான்
விரும்பிய காதலர்கள் ஒருவருக்குள் ஒருவர் மூழ்கி முத்து எடுப்பார்
அரும்பிய மல்லிகை வாசனை இரவுமுழுதும் மயக்கத்தில் கிடப்பர்
திரும்பி கூடு வரும் பறவைகள் விடியும் வரை சல்லாப ஒலி தான்

5. இந்திர விழா ஊர் எடுத்த காதை .
ஊர் மக்கள் கொடி ஏற்றி கொண்டாடுகிறார்கள் இந்திர விழா
புகாரின் முக்கிய பகுதிகள் மருவூர்பாக்கம், பட்டினப் பாக்கம்.
சூரியன் சுற்றிவரும் பகலும், சந்திரன் உலா வரும் இரவும்
இராப் பத்து பகல் பத்து மக்கள் மகிழ்ந்தாடும் விழா அது

1. மருவூர்ப் பாக்கத்தின் சிறப்புரைத்தல் .
இங்கு யவனர், தச்சர், பொற்கொல்லர் நெசவாளி வாழ்கிறார்கள்
எங்கிருந்தோ வந்த யவனர் மருவூரை தம் ஊராக மதித்தனர்
வங்கக்கடல் அருகில் யவனர் செல்வம் கொழிக்க வாழ்ந்தனர்
சங்கத் தமிழ் ஏழிசைகளில் பாடும் பாணர்களும் இருந்தனர்

வண்ணம், சுண்ணம், சந்தனம், பட்டு, நவமணிகள் விற்கும்
எண்ணில் அடங்கா கடைகளும், கடை வீதிகளும் திகழ்ந்தன
மண்ணில் விளைந்த முத்து, பவளங்கள் குவிந்து கிடந்தன
வெண்கலப் பாத்திரங்கள் மட்பாண்ட கடைகளும் உண்டு

2. பட்டினப் பாக்கத்தின் சிறப்புரைத்தல் .
அரச வீதி, தேர் வீதி, கடை வீதி, உழவர் வீதி, மருத்துவர் வீதி
நேரத்தைக்கணிக்கும் சோதிடர்கள் வீதி, அந்தணர்கள் வீதி
தேர் ஓட்டும் சாரதியார், குதிரை வீரர், யானைப் பாகர் வீதிகள்
பேர் போற்றும் சான்றோர் வீதிகள்கொண்டது பட்டினப்பாக்கம்

... தொடரும்

கவிஞர் திருக்காமு

# பனைமரம்

பனைமரமே  உனக்கு
இணை மரமுண்டோ?

ஓலைச் சுவடிகளின்
தாயுமிவள்.
ஒப்பற்ற சுவடிகளின்
பிறப்பிடமிவள்.

ஒற்றைக்காலில் தவமிருந்து
உயரே நின்று
காற்றைத் தடுத்திடுவாள்.

நட்டுவைத்து விட்டுச் சென்றாலும்.
நாளும் வாழ்ந்திடுவாள்
நமக்காக.

மதிக்காமலே
நாமிருந்தாலும்
மதிப்புக்கூட்டுப்
பொருள்களைத் தந்திடுவாள்.

நேரிலே நாம் சென்று
பார்க்கா  விட்டாலும்.
வேரிலே நீரை உறிஞ்சி
நிலத்தடி நீரைக்
காத்திடுவாள்.

நானிலத்திலே நீயுமே
மாநில மரமாய்
விளங்குகிறாய்.



குளக்கரையினிலே
உறைந்திடுவாள்.
நம் உள்ளங்களிலே
நிறைந்திடுவாள்.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# மணிப்பூர் மகள்

பாயும் நதிகளுக்கும்
பறக்கும் பறவைகளுக்கும்
அன்னை தேசத்துக்குமென
அத்தனைக்கும் சூட்டினோம்
பெண்களின் பெயரையே.

குழந்தையிலிருந்து
கிழவி வரை எவரையும் நடமாடவிடாத
சுதந்திர மண்ணில்
மலம் திண்ணிகளால்
அரங்கேறிக் கொண்டேயிருக்கிறது
நிர்வாணப்படுத்தும் நிகழ்வுகள்.



இன்னொருவர்
ஆடையை பிடுங்கி
நிர்வாணமாக்கிய மணிப்பூர்
கொடூரங்களை
நிர்வாணமாய் வீதிக்கு இழுத்து வந்து
தீயிட்டு கொளுத்து
திரும்பவும் நிகழாதிருக்கும்
இது போலொரு இன்னொன்றும்.

குற்றத்தை நிரூபிக்க
ஆயிரம் ஆதாரங்களிருந்தும்
தண்டனைகள் தந்திட
அச்சப்படும் அதிகாரத்தின்
முகத்தில் மூத்திர மழை பெய்யட்டும்.

விண்ணைத்தொடும்
நவீனக் கண்டுபிடிப்புகளிருந்தும்
நடந்ததெல்லாம்
நாள்பட்டுத் தெரிந்தும்
எதுவும் செய்ய இயலாத
பிணங்களாகவே கிடக்கிறது
பதவிகளின் அதிகாரங்கள்.

நாடெங்குமுள்ள
வெவ்வேறு நிறக்கட்சிக் கொடிகளோடு
நாங்களும் கருப்புக் கொடிகளோடு
நாடெங்கும் தேடுகிறோம்
மணிப்பூர் மகளுக்கான நியதியை.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# முகவரியில்லா மடல்

எழுதத்தான் நினைத்தேனொரு கடிதமதை அடியேன்
எழுதாமல் இருந்தேனெந்தன் தந்தையவர் கட்டளையால்!
மாமதுரை யாதவரில் தமிழ்ப்பயின்ற வேளை
மாணவர் ஒன்பதுபேருடன் மாணவியர் நால்வர்பயின்றனர் !
மாணவர்களும் மாணவியரும் வேறுபாடின்றி பேசிப்பழகினோம்!

இரண்டாம் ஆண்டில்மாணவர் எழுதியளித்த கையொப்பயேட்டில்
இரண்டு பக்கங்களுக்கும் மேலேன்னைப் போற்றியெழுதிய
மாணவியொருவர் இருந்தாரவர் பாடுவதில் வல்லவர்;
மேடைப்பேச்சில் வல்லண்மை எனக்கு இருந்தது;
என்னுடனிணைந்து மேடைப்பேச்சில் பங்கேற்றுவென்ற
அன்பு உதயசூரியன் எழுதினான் அடுத்த பிறவியிலவன்
அடியேனைக் கணவனாயடைய பெண்ணாய்ப் பிறப்பானென்று!

"செண்பகப்பூவே" பாடலைப்பாடி யனைவர்மனத்தை வென்றவந்தமாணவி
சிந்தனையும் எந்தன்சிந்தனையும் ஈழத்தமிழர்ப் பிரச்சனையில்
ஒன்றாயிருந்தது; அதுவொரு நட்பை இருவருக்குமிடை
நன்றாய் வளரச்செய்து மிருந்ததுவதென் மனத்திலவரெந்தன்
மனையாளாய்வரத் தகுதியுடையவ ரென்றுசிந்திக்க வைத்தது!




காதலொன்றுமில்லை யென்றாலுமவர் தீடிரென யெனக்கெழுதிய
சாதாரண கடிதமதற்கு தந்தையவர்தடை ஏற்படுத்தினாரது
காதலாய்வளரக் கூடாதெனயச் சத்தாலென்பதால் மறுமொழிக்
கடிதமேதும் நானவர்க்கு வரையவில்லை ஆயினுமவர்
நேரில்பார்த்த வொருநாளில் மறுகடிதமெழுத வியலாகாரணம்
நானுரைக்க கேட்டாரவரதற் கெழுதவொரு செய்தியில்லை
என்னிடமென அன்று நானுரைத்தேன்; இன்றவரெங்கு
எப்படி இருக்கின்றாரோ எங்கிருக்கின்றாரோ நானறியேன்!
நலம்நலமறிய ஆவலெனவொரு மடல்வரைகின்றேன் அவருக்கதை
நானெந்தமுகவ ரியிட்டெழுதியனுப் புவேனவர்முகவறி யறியாது!
அருட்பெருஞ்ஜோதி மந்திரத்திலவர் பெயரடக்கமதைக் குறியாய்க்கொண்டு
அகரமுதல இலக்கியப் பேரவையென்ற விந்ததூதுவன்
அடியேன்மடலை அன்புடன்சேர்க்க வேண்டுவேனவர் முகவரியறிந்தே!

**கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி**

# பிறன் இல் விழையாமை

**அதிகாரம் 15**

அறம் அறிந்தவன் பிறர் மனைவியை கண்டு
மனம் பிறழ மாட்டர்

நேர்மையும் ஒழுக்கமும் உடையோர்
அடுத்தவன் மனைவியின் மீது ஆசைப்படமாட்டர்.

அடுத்தவன் மனைவி மீது ஆசை கொள்பவன்
தீய எண்ணம் உள்ளோரே.

நண்பனின் மனைவி மீது மோகம் கொண்டு
தகாத செயலில் ஈடுபடுபவன் கீழானவர்களே
இவர்கள் இருந்தும் இறந்ததுக்கு ஒப்பானவர்கள்




எத்தனை பெருமை இருந்தாலும்
அடுத்தவன் மனைவியை அடைய எண்ணுபவன்
சிறுமையுடையோரே

இவருக்கு மதிப்பேது?
மரியாதை ஏது?

இவன் அழியா பழிக்கு ஆளாவனே
இவனை விட்டு பகை பழி பாவம் பயம் இவை நான்கும்
விலகாதென்பதை அறிவீர்களா?

கடல் சூழ்ந்த உலகத்தின் பெருமைகளை
மொத்தமாக அடைபவார்களே
பிறன் மனைவியின் தோளைத் தீண்டாதவர்

அறமே செய்யாவிடிலும் அடுத்தவர் மனைவியை தீண்டாதே
இது கொடும்பாவச் செயலாகுமே.

சான்றோர் இத்தகைய வழியில் விழி வைக்க மாட்டார்கள்

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# யானும் தனியாக

யாரும் இல்லாத ஓரிடத்தில் தன்னந் தனியாளாக.
விரிந்த மலரொன்றிலிருந்து சுரக்கின்ற
தேனை போன்று காதலை விழிகளில் ததும்பி நிற்கின்றவளின்
நிலையை அறிவாயோ.

வளரும் இளமைச் செவ்வியைப் பொருந்திய
அழகிய கொங்கைகளை உடைய மடப்பமும்
மென்மையையும் கொண்டவளை நின் கண்கள் காணாது
சமைதாங்காது தளர்கின்ற தன் இடையை நீயும் அறிவாயோ.



சிவந்த கொண்டை மீன்களை
போன்ற நீட்சியுடைய அவனது கண்கள்
மனதிலே ஓடி விருப்பத்தை எழச்செய்து
என்னுள்ளே காம அம்புகளை வீசுவதை
அறியாதவனாய் அவன் வர தாமதம் செய்வது ஏனோ.

சுற்றம் மறந்து சுயமிழந்து
யானும் இங்கே தனியளாக வந்தே நிற்கின்றேன் .
நீயுமிங்கு வாராது போனால்
என்னோடே ஒட்டிக்கொள்ளுமே இப்பசலை கொடியும்.
நீயுமிங்கே வந்து நின்றால் இவையனைத்தும் தீரும்!

கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# எங்கே?

உகந்த நல் பேச்சு எங்கே?
உக்ரமான சொற்கள் வருது இங்கே
உங்கள் நம் ஆனது எங்கே?
உன்னுடையது ஆனது இங்கே

உச்சி முகர்ந்து பாராட்டியது எங்கே?
உச்சியில் நச்சென தட்டுவது இங்கே
உடனடியாக வந்தது எங்கே?
உடனே வர முடியாது சொல்வது இங்கே

உட்கார்ந்து பேசியது எங்கே?
உட்கார பிடியாமல் எழவது இங்கே
உடல் நலம் காணாமல் அறிந்தது எங்கே?
உடும்பு பிடியாக காணாமல் செல்வது இங்கே



உணவு உண்டாயா கேட்டது எங்கே?
உணவு உன்பசிக்கு தானே இங்கே
உதாரணமாக இருந்தது எங்கே?
உத்தரவாய் ஆனது இங்கே

உண்மையை பகிர்ந்தது எங்கே?
உண்மையிலே சொல்லலாதது இங்கே
உதிரமாக கண்ணீர் வந்தது எங்கே?
உதிரத்தை கண்டு உதறித்தள்ளுவது இங்கே

உசிதமாக ஆறுதல் எங்கே?
உசுப்பேற்றும் கோவம் இங்கே
உந்து என கரம் தூக்கி பிடித்தது எங்கே?
உதாசீனபடுத்தியது இங்கே

உபயமாக அபயம் அங்கே?
உபத்ரவமானதே இங்கே
உம்மென்றால் அழுவது அங்கே
உனக்கென்ன கவலை இங்கே

உயிரென்றால் நீதான் சொல் எங்கே?
உயிரை ஏன் எடுக்கிறாய் இங்கே
உரிமையாக கொண்டாடியது எங்கே?
உனக்கு என்ன உரிமை இங்கே

உருவம் மட்டுமே நினைவில் எங்கே?
உரலாக இடிப்பது இங்கே
உலா வரவேண்டுமென அவா எங்கே?
உல்லாசம் கேட்குதா இங்கே

உவகையாக மகிழ்வித்தது எங்கே?
உலுக்கி எடுக்கும் பேச்சு இங்கே
உழைப்பது தானே பெரிதல்ல எங்கே?
உழவு ஏராக சுற்றுவது இங்கே

உற்றவளாக எப்போது நீ எங்கே?
உறுத்தல் பார்வைதான் இங்கே
உள்ளக்கோவிலில் தேவதை எங்கே?
உளியாக செதுக்குவது இங்கே

உனக்காக மட்டுமே எல்லாம் எங்கே?
உனைத்தவிர மற்றதெல்லாம் இங்கே
உன்னுள் நான் வாழ்ந்தேனே எங்கே?
உனை காணாமல் தவித்தேனே இங்கே

உன்மத்த காதலுக்காக வாழ்ந்தது எங்கே?
உன் மொத்த பொறுப்புகள் மட்டும் இங்கே

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# கொதிக்கும் பூமி

விடலைப்பருவத்தை எட்டியிருக்கும்
பொன்வயலின் பிஞ்சுவயிற்றை
மயக்க  ஊசியின்றி கிழித்து
குழயாய்களை உள்ளிறக்கி
கோணிஊசியால் தையல் போடும்
கிறுக்குக் கூட்டத்திற்குப் புரியுமா?

நெற்கதிர் பிள்ளைகளுக்கு
வியர்வைப்பாலை ஊட்டி ஊட்டி
நவரத்தினங்களாய் ஆளாக்கி
உயிரைச் சொட்டுச் சொட்டாய் இழக்கும்
பிரம்மனை விஞ்சும் பெற்றோருக்கு வலி

இயற்கையை அழித்து
முன்னேற்றப் பாதையில் சென்றால்
பசியெனும் முட்டுச்சந்தில்
நாம் நிற்கப்போகும் காலம்
தொலை தூரத்தில் இல்லை



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# உறவே இல்லா உறவு

உறவே இல்லாத
உயிருள்ள உன்னத உறவு நம் நட்பு

உணர்வுகளில் கலந்து உள்ளத்தில் நிலைத்து
உயிர் உள்ள வரை உடன் இணைந்து காத்திடும் உறவு

சாதி மதங்கள் கடந்து சாதிக்க தோள் கொடுக்கும்
சாதனை உறவு

தடுக்கி விழும் போது தூண்களாக தாங்கி நிற்கும்
ஊன்றுகோல் உறவு

கண்களில் கண்ணீர் வடிக்கும் போது
கலங்கி நின்று ஆறுதல் படுத்தும் கருணை உறவு

பாலைவன வாழ்க்கையை
சோலைவனமாக மாற்றம் பரிசுத்த நீரூற்றான உறவு

தடம் மாறும் போது வடம் பிடித்து இழுத்து
தடம் பதிக்க வைத்து மணிமகுடம் சூட்டும் உறவு

உள்ளன்போடு என்றும் கள்ளமில்லாமல் பழகும் அன்பு
உறவே இல்லாத உன்னத உறவு நட்பு மட்டுமே

நட்பைக் கற்பை போல் என்னுபவனே உயர்ந்த உன்னத நண்பன்!

கவிஞர் அ.இராபர்ட்கென்னடி,கானூர்

# தற்கால மனிதன்(ம்)

மனித உருவில் வன்மக் கூடு
மனிதம் கருவறுத்துச் சிதையுதே நாடு
புகழை நாடிப் போட்டே வேசம்
புனிதம் தொலைத்துப் போகுதே நாசம்

மடியின் கொடுமை வயிறோ வெறுமை
கடினப் பொழுதைச் சகிக்கும் நிலைமை
கையேந்த மறுக்கும் தன்மான மனமே
கைக்குழந்தை சிரிக்கத் தடுமாறுதே மறுகணமே

குடும்பத்தைக் காக்க வக்கற்ற பாவி
கெடும்புகள் போக்கத் தவிக்குதே ஆவி
சுயமியில் சுயநலமவன் புகழின் வேட்டை
சுயத்தை இழந்தே புதையுதே வேட்கை

முக்காட்டுக்குள் முகம் மறைத்து  மாதுவே
திக்கின்றி அகம் மறத்தே போகுதே
விழியிரண்டும் மூடி கண்ணீரை மறைத்து
வழியின்றி நிற்கிறாள் வாழ்வை வெறுத்து

முகக்கவசம் கையுறை புனைந்தது ஏனோ
முடியாமல் மிடியானவன் தீட்டுடையான் என்றோ
முகம் திறந்து பைகொடுத்து புகைப்படம்தானோ
அகமது புகைக் கறை ஆகிவிட்டதனாலோ

காட்டிலே கேட்குதே அன்பெனும் ராகம்
கல்லுக்குள் கூடச் சுரந்திடும் ஈரம்
நாட்டுக்குள் இங்கே வறட்சியே தாகம்
நாட்டங்கள் எல்லாம் நட்டமாய்ப் போகும்



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# மனைவிக்கு மரியாதை

அஞ்சு-வகை பூதங்கள் ஒன்றான ஒருத்தி
அன்பாலே ஆட்கொண்டு மிரட்டும் அரக்கி
இல்லாது நடவாது தவறானால் தூக்கிவி(லி)டும்
சம்சாரம் என்பவளே வாழ்க்கைக்கு மின்சாரம்
அன்பு தொடங்குவதோ தொங்கு மஞ்சள் கயிறு
வம்பைத் துவங்கினாலோ காயும் அடி வயிறு
குதூகல உச்சத்தில் போடும் காப்பி சிறக்கும்
ஆத்திரம் தலைக்கே(ற்)ற பாத்திரம் பறக்கும்
பதியனிட்ட ரோஜாக் கன்றைப்போல் வந்தாள்
செம்புலத்தில் பொழிந்த நீரைப்போல் கலந்தாள்
தனித்திருந்த வேளை மெள்ளக் கண்ணடித்தாள்
மாதம் சில கடந்தவுடன் மாங்காயைக் கடித்தாள்
ஐயிரண்டு திங்கள் தன் அங்கமென சுமந்தாள்
மலரனைய மகள்தனையே தங்கமெனத் தந்தாள்
அப்பாவின் நினைவுவர எல்லாமே மறக்கும்
இறக்கிவைத்த சாம்பாரில் சர்க்கரை இனிக்கும்
திறமையை உயிர்ப்பிக்கும் உயிருள்ள தூண்டுகோல்
தொல்வியில் துவள்கையில் தாங்கும் ஊன்றுகோல்
உதித்தது சிதம்பரமோ உம் பெயரே சிதம்பரமோ
மனையாளின் மறுபெயரை மீனாட்சி என்பீரோ
ஊடல்கள் கூடல்கள் மணவாழ்வில் ஓரங்கம்
புரியாத மணவாளன் இடிவாங்கும் மிருதங்கம்
இறுதிவரை உடனிருக்கும் வாழ்க்கைத் துணை நலம்
உணர்ந்தால் நீ குவித்திருப்பாய் வாழ்வில் பெருவளம்
மனிதனின் வாழ்க்கையோர் ஒருவழிப் பாதை
இறுதிவரை செய்திருப்பாய் மனைவிக்கு மரியாதை



கவிஞர் ரவிஜி

# வரமாய் வந்தவன்

வாழ்வில் வரமாய்
வந்தவனை பற்றி
வடித்திட
வார்த்தைகளும்
வசப்படவில்லை.

அவன் நட்பு
மட்டும் போதுமென்று
எண்ணிய மணித்துளிகள்
ஏராளம்.

அவனை அறிய
ஆவல் கொண்டு
அவனறியாமல் அவனை
பின்தொடர்ந்த நாட்கள்
ஏராளம்.

இன்று
அவனின் அவளாய்
நான் நிற்க
என் அனைத்துமாய்
அவனாகிட
தடுமாறி தான்
போகிறேன்
எல்லையில்லா
மகிழ்ச்சியில்!

வேறெதுவும்
வேண்டுதல் இல்லை
கடவுளிடம்,

அவனின்
அளவில்லாத
அன்பும்,

சொல்லில்
அடக்க முடியாத
காதலும்,

கண்டிப்புடன் கூடிய
அக்கறையும்,
காவலுடன் கூடிய
அரவணைப்பும்,

காலம் முழுவதும்
வேண்டும்
என்பதை தவிர.



கவிஞர் சரண்யா தேவி,மேட்டூர் அணை -1

அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நம்பிக்கை விதைக்கும் மூன்று சொல்

"அன்பு"

ஒவ்வொரு உயிருக்கும்
இயற்கை வழங்கும் பெரும்
மருந்து!

"நினைவு"

வறண்டு போன பொழுதை
வளமை காண செய்திடும்!

"மறதி"

கடினமான சூழலை
கடந்து வர உதவிடும்!



கவிஞர் செ.தமிழ்நேயன்



அகர முதல

# குழந்தை உலகம்



வார்த்தை ஜாலங்கள்
கோர்த்துப் பேசும்
திறனறியா

மூளை கசக்கி
யோசித்துப் பழகும்
செயலறியா

ஓடும் திசைகள்
காடா மேடா
காலறியா

விழுந்து எழுந்து
போகும் பாதை
சுமையறியா

பேசும் மொழிகள்
சரியா தவறா
மனமறியா

கேட்கும் காதுகள்
ஐந்தா ஆறா
அறிவறியா

ஒன்றும் அறியா
குழந்தை உலகம்
ஒன்று அறியும்

மகிழ்ச்சி காட்டில்
மூடா சிறகுகளின்
பயனறியும்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# இயற்கையே நமது இதயம்


இயற்கையை அழித்து எவ்வாறு வாழ்வது?
செயற்கையால், ஏற்படும் வாழ்வில் தாழ்வது
இதயத்தை இழந்துவிட்டு என்ன செய்வோம்
இயற்கை அழித்து இன்னல் செய்கிறோம்
பூமியை உடைப்பதற்கு உரிமை இல்லை
போற்றிக் காப்பதற்கு கடமை உண்டு
வேள்வி செய்தாலும் வானம் பொழியாது
மண்வளம் காக்கவும் மனித வளம் காக்கவும்
இயற்கையை நேசிப்போம் கடவுளாய் பூசிப்போம்
மரத்தை வெட்ட என்றும் யோசிப்போம்
இல்லையேல் உயிர் வாழ என்றும் யாசிப்போம்
நீருணவு சோறுணவு தருவது மழையே
மழையை போற்றி என்றும் பிழைப்போம்
இயற்கையைக் காக்க நாமே உழைப்போம்
வீதி எங்கும் விதைகளைப் போடு
உருவாகும் எங்கும் இயற்கைக் காடு
உயிர்வளி நமக்கு இயல்பாய் கிடைத்திடும்
ஏற்படும் இன்னல்கள் மின்னலாய் நீங்கிடும்
எல்லா உயிர்களும் இன்புற்று இருக்கவே
இயற்கை என்றும் படைப்பின் ரகசியம்
இயற்கையைக் காத்தல் ஒவ்வொருவருக்கும் அவசியம்
நீரின்றி அமையாது உலகு எங்குமே
நீயின்றி எவர்தான் இயற்கையை காப்பது?
மலர்கள் அழகாய் பூத்துக் குலுங்குது
பல கைகள் வீசி எறிந்தால் நெஞ்சம் நடுங்குது?
இயற்கை எழிலை என்றும் ரசிப்போம்
அதனைக் காப்பதைத் தொழிலாய் கொள்வோம்
இயற்கையோடு இணைந்து வாழ்வை வெல்வோம்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# பனிவிழும் மலர்வனம்

தென்னங்கீத்து குச்சுக்குள்ளே
தேன்சிட்டு சோடி ஒண்ணு
மத்த கதை அலசாமல்
மனசோடு பேசுதம்மா
மாமரத்து கூடுவாழும்
சோழிப் பேச்சு சொந்தக்காரி
காதோடு காதல்மொழி
கரையாது பேசுதம்மா
கீச்கீச்கீச்னு குயிலோடு மல்லுக்கட்டி
ரகசியம் னு சொல்லிபுட்டு
செவியடைக்க கூவுதம்மா
கரண்ட் கம்பி ஊஞ்சலாடி
காத்தோடு சேதிசொல்லி
ரெட்டைவால் குருவி சோடியொண்ணு
இணைந்து பாடி இசைக்குதம்மா
செந்தாழம்பூவே நீ கேளு
செண்பகப் பூவே நீயும் கேளு
மருதாணிப்பூவே நீயே கேளு
கொதிக்காம வடித்த சோறும்
துவரை தேடும் சாம்பாரும்
கவனம் கேட்டு கலகலனு
சிரிச்சு வைக்குற கதைய கேளு
வாடாத வாசப்பூவீரே
எம் மனமொழி அறிந்தே யாரேனும்
தன் மணம் குழைத்து சேதி
ஒண்ணு தூது செல்வீரோ
சொல்லாமலே சென்ற கவனத்தை
சொல்லிபுட்டே கேட்டு வாங்கி வருவீரோ!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# செங்கோன்மை

எவர்க்கும் ஏற்றம்பாராது
இரக்கமும்பாராது குற்றமாய்ந்து.
தக்கதண்டனை விதிப்பதொன்றே
அரசனின் கோல்முறையாம்.




மண்ணின் உயிரெல்லாம்
மழைநம்பி வாழுமாப்போல்.
மன்னனின் செங்கோன்மையும்
குடிகளுக்கு உயிராம்.

அந்தணருயர்த்தும் மறைநூலுக்கும்
அறநெறிக்கும் அடிப்படை.
மன்னவனின் செங்கோன்மையாம்
மன்னுயிர் காப்பதுவுமதுவாம்.

குடியணைத்துக் கோல்செலுத்தும்
கோன்முடியின் செங்கோலின்.
அடிதழுவி வாழ்ந்திடுமாம்
குடிமக்களின் நிலைவாழ்வாம்.

நெறிவழுவா நீதிகொண்டு
செங்கோலாற்றும் கோனின்.
நிலமெல்லாம் மும்மழையால்
விளைபொருள் பெருகியோங்குமாம்.

வேந்தனின் வெற்றி
அவன்கைபற்றிய வேலன்று.
கோல்கோணாது ஆட்சிசெய்யும்
அழகேயவன் வெற்றியாம்.

உலகெல்லாம் உய்வித்து
செங்கோன்மை வழுவாது.
கோலாற்றும் கோனை
அக்கோன்மையே உய்விக்குமாம்.

முறையிடும் குடிகள்முன்
காட்சிக்கெளியோனாய் குறைகேட்டு.
ஆராய்ந்து முறைசெய்யாகோன்
தரம்தாழ்ந்து கெட்டழிவானாம்.

மற்றோர் தன்குடிவருத்தாது
செங்கோலால் நலம்புரிந்து.
குற்றந்தவிர்த்து முறைசெய்தலே
பழியிலா அரசின்தொழிலாம்.

கொடியோரைக் கொன்றழித்து
அருளோடு குடிகாத்து.
படிமுறைசெய்தல் பசும்பயிரில்
களையெடுப்பதொத்த நற்செயலாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# சொல்லின் செல்வன்

சொல்லிலும், செயலிலும் உலகமே போற்றிய
ஸ்ரீ ராம பக்த அனுமனே சொல்லின் செல்வன்
கம்ப ராமாயணத்தில், அனுமனை பற்றி எழுதும்போது,
கம்பர் பிரபஞ்சங்களின் சக்தியாக வர்ணிக்கிறார்.
அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் எம்மை அளித்துக் காப்பான்.
பஞ்சபூதங்களில் ஒன்றான வாயுத்தேவனால் பெறப்பட்டு,
பஞ்சபூதங்களின் ஒன்றான ஆகாய மார்க்கமாய்,
பஞ்சபூதங்களில் ஒன்றான சமுத்திரத்தை கடந்து,
இராமபிரானின் தூதனாய் இலங்கைச் சென்று
பஞ்சபூதங்களில் ஒன்றான பூமி தேவி பெற்ற தெய்வப் பெண்
சீதையைக் கண்டு சொல்லிவிட்டு,
சத்ருக்களான அரக்கர்களது இலங்கையில்,
பஞ்சபூதங்களில் ஒன்றான நெருப்பை
வைத்தவன் அனுமான்.
அம்மகான் நம்மை கருணையுடன் பாதுகாப்பான்.
அனுமனின் சிறப்புகள் எண்ணில் அடங்கா.
தென் திசை சென்று, சீதையிடம் கணையாழி தந்து
பின்பு சூடாமணி பெற்று, ராமனிடம் தந்து
இலங்கையில் போருக்கு வாரை சேனையுடன் சென்று,
போரில் மயங்கியவர்களுக்கு சஞ்சீவி மலையுடன் மூலிகை
தந்து மயக்கம் தெளிவித்து, பின் வெற்றி கண்டு
ஜெயமாக்கிய அனுமனை தொழுதால் ஜெயம் நிச்சயமே!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# சொல்லப்படாத காதல்

அனுதினமும் அவனுடன்
செல்லம் கொஞ்சுகிறாள்.

அவனிடம் எண்ணற்ற
கதைகள் பேசுகிறாள்.

அவனின் அருகாமையில்
மனம் குளிர்கிறாள்.

அவனின் தோளில்
சாய்ந்து உறக்கம் கொள்கிறாள்.

அவனின் நினைவை மட்டுமே
உயிர் மூச்சாக எண்ணி

அவளின் சொல்லப்படாத காதலை
இருதயத்தில் சுமந்து



யாரோ நீ யாரோ நான்
என்று இருப்பவர்கள்

விவாகத்தில் இணையும்
திருநாளை எதிர்பார்த்து.

கால நேரம் பார்க்காமல்
கற்பனையில் வாழ்கிறாள்.

ஒருமுறை கூட நேரில்
பார்த்துக் கொள்ளாத
அவள் காதல் கணவனுடன்.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# மேகச்சேலை

சோலையின் பூக்களெல்லாம் முகம் தூக்கி வைக்க
வண்ணத்துபூச்சியோ வாயடைத்து
வட்டமிட்டு சுற்றிவரும்
வானவில் வண்ணங்களை வகையாய் கலந்து
தூரிகையால் ஓவியம் தீட்டி
சித்திரபாவையின் சேலை நெய்தனரோ
கண்ணும் கையும் பரபரவென
பாந்தமான வேலைக்குள்
மெல்லிய இடைதெரிய மேனித்தழுவும் சேலையே
சேலைதொட்ட மேனியை தீண்டிடும் பேராவல்
தென்றலுக்கு தழுவி நழுவி செல்லுதே
இடைதழுவிய சேலையும் இதமாய்
கவிபாடுதே சிறு வெட்கத்தால்
அவளின் கவிஞன் ஆசையில் முகம் நோக்க
விழிகள் தெறிக்க இமைமூட மறந்தானே
அழகியடி நீ என பார்வை
சொல்லிடும் சேதியில்
பேசமறந்த இரட்டை கிளிகளோ
மௌனத்தின் வாசலில்
விழிகள் பேசிய கவிதையில்
காற்று வந்து கதவடைக்க
வளையோசையின் சத்தமது
இன்னிசையாய் இசைமீட்ட
எட்டிபார்த்தாள் முகிலவள்
வெட்கத்தால் முகம்மூடினாளே
மேகச்சேலையால்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# இப்பாவாகுதல்

வெகு வேகமாக சென்ற
முதியவரின் மிதிவண்டி
பழுதாகியது

கழன்டு போன
சங்கிலியை
இணைக்க முயல்கிறார்

அவ்வப்போது
கடிகாரத்தை பார்த்து
இதழ் குவித்து
பெருமூச்சிடுகிறார்

அருகாமையில் துலாவி
சிறு குச்சியை எடுத்து
சீரமைக்கிறார்

சுற்றிய வண்ணம்
சரியானது மிதிவண்டி
ஆனால் சுழலாமல் நின்றுவிட்டது
அன்றைய நாள்

அந்த மொத்த நாளையும்
தூக்கி சுமந்தபடி
எழுந்து நிமிர்கிறார்
முதியவர்
இவரை
ஒவ்வொரு வீட்டின்
அப்பா என நாம் அழைப்பது சரிதானே!



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# பேசும் காகிதம்

பேசும் பேசிக்கொண்டே இருக்கும்
பலரிடம் பலநேரம் பலவிதமாக
ஏதோ ஒருவரிடம்
ஏதோ ஒரு விதத்தில்
பேசிக்கொண்டே தான் இருக்கும்
ஏனோ அது ஒருவர் தனக்குத் தானே
பேசிக்கொண்ட பேச்சாகும்
அது அவரின் சுற்றார் உறவினர்
பேசிய பேச்சாகும்
அந்த பேச்சோ பேனாவின் மையால்
காகிதத்தில் உருவெடுக்கும் போதெல்லாம்
ஊரெங்கும் பேசுகிறது நாடெங்கும் பேசுகிறது
உலகெங்கும் பேசுகிறது.
இவ்வுலகில் வியப்பு என்னவென்றால்
காகிதம் பேசுகிறது!



கவிஞர் ரா.சீனிவாசன்

# தூது

காற்றை தூது விட்டேன்
தென்றலாய் வீசியது
மேகத்தை தூது விட்டேன்
மழையாய் வந்தது
மழையை தூது விட்டேன்
சாரலாய் சுகம் தந்தது
பூக்களை தூது விட்டேன்
நறுமணமாய் வீசியது
வானவில்லை தூது விட்டேன்
வண்ணங்களாய் மின்னியது
நிலவை தூது விட்டேன்
குளிராக இருந்தது
இயற்கையை தூது விட்டேன்
அழகாய் தெரிந்தது
கண்களை தூது விட்டேன்
காட்சியாக தெரிந்தது
எண்ணங்களை தூது விட்டேன்
எழுத்துக்களாக தெரிந்தது
கற்பனைகளை தூது விட்டேன்
கவிதைகளாக வந்தது
கனவுகளை தூது விட்டேன்
கண்ணீராக வந்தது
நினைவுகளை தூது விட்டேன்
நெருஞ்சி முள்ளாய் கிழித்தது
இதயத்தை தூது விட்டேன்
இனியவரின் முகமே தெரிந்தது!



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# மலர்ச்சி


பெண்ணின்
சிறு புரிப்பிலேயே
ஒரு ஆண்மகனின்
மொத்த வெற்றியும்
அடங்கிப் போய் விடும்;
எங்கே ஒருவன்
பெறாத தாயைப் போல;
பெண் மகவைச்
சீராட்டும் தந்தை போல
மொத்தத்தில், அவளின்
கனவுகளின் மொத்த
உருவாகி உயிர்
பெற்று எதிர்
நின்று அவளது
வெற்றி கண்டு
பூரித்துப் புகழ்
சேர்க்கிறானோ
அங்கு தான்
பெண் முகமே
காண்பதற்கே
அழகியதொரு
சிறு பூந்தோட்டமாக
மலர்ச்சி உறும்!




கவிஞர் மலர் அபி

# சேக்கிழார் (தொடர்ச்சி 3)

சேக்கிழார்தாம் யாத்தளித்த பெரியபுரா ணப்பேரமை
திருத்தொண்டர் புராணமதில் பலசமயம் பலபதிப்பு
வந்துளது! பாடல்கள் எண்ணிக்கை வேறுபாடு
கொண்டதுவே! சபாபதிப்பேர் முதலியார்தம் பதிப்பதனில்
நான்காயிர முன்னூறு பாடல்கள் அமைந்ததுவே!
தருமபுர பதிப்பதனில் ஆறுமுகத் தம்பிரானால்
கொணர்ந்ததனில் நான்காயிர இருநூற்று எழுபத்து
நான்குபாடல் கொண்டதது! யாழ்பாண சபாபதியார்
ஆறுமுக நாவலர்தம் வெளியீட்டில் நான்காயிர
இருநூற்று எண்பத்து ஆறளவு பாடல்கள்
வந்ததுவே! சீர்சுந்தர மூர்த்தியார்தம் பங்கினிது!
பெரியபுரா ணந்தன்னில் காண்"உலகெலாம் " என்பதுவோ
அவ்வைந்து எழுத்துச்சொல் பதினாறு முறையதுவும்
அநபாய சோழன்தனைப் போற்றுவது பதினோறு
இடங்களிலும் "உலகம்எலாம் " என்பதுவும் "அகிலம்: என
"அகிலலோகம் " எனமூன்றும் ஓரோர்முறை அமைந்ததுவாய்
காண்கிறதே ! "அகில"மென்பது அனைத்துமென எல்லாமென
அகன்றதுவாய் முப்பொருளில் மிளிர்கிறதே! நற்சுவையாம் !
சேக்கிழாரின் பெரியபுரா ணம்பற்றி மீனாட்சி
சுந்தரனார் "தெய்வமணக் குஞ்செய்யுள் " என்றுரைத்தார்!
சுத்தானந் தபாரதியார் "சேக்கிழார்தம் பால்வடியும்
செந்தமிழாச்" செப்பினாரே! நாயன்மார் அறுபத்து
மூவர்தம் வரலாறு சாற்றுவதே ! நூற்பயனாய்
உணர்த்துவது: பெருமையால் தம்மையே ஒப்பாராய்;
பேணுவதால் எம்மையே பெற்றோராய்; ஒருமையால்
உலகதனை வெல்வோராய்; ஊனமது மேலொன்றும்
இல்லாராய்; அருமையால் நிலையதனில் நின்றாராய்;
அன்பினாலே இன்பமதே ஆர்வாராய்; இருமையதும்
தாம்கடந்து நின்றாராய், இவரையே நீயடைவாய் "
என்றபடி ஏற்றத்தைப் பெற்றேநாம் மிளிர்வோமே!




கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# மடியாகிய தீண்டு

நிசப்தம் தேடிய ஓட்டம்
மன அமைதியில் மென் தென்றலின்
துணையோடு நிதானமாய்
இமை மூடி துயிலும் கனவுகளைக்
கண்களில் சுமந்தே வாடுகிற நறுவீ.

எவர் துயர் கொண்டால் எமக்கென்ன
என்ற உறவுகளின் துணை.
விழியில் திரவம் கொட்டிட
தயாராகியே நிற்க.

மன்றாடி மறைத்து வைத்தன
இமையின் கேசமுட்கள்.
மெல்லிசையாய் செவி சேரும்
மழலையின் கொஞ்சல் கூட
மன அழுத்தமாய் மாறியே

முளரியதன் மொக்கும்.
முட்களும் தன்னை தானே
குத்துதோ நறுவீ அதனை.



அகில
ஆரவாரத்தில்
இன்னிசையாய்
ஈகையை
உணர்ந்தே
ஊனமுற்று
எரிதழலில்
ஏறி நின்றவளின்
ஐயம் போக்கிட
ஒற்றை விரல் பதிக்க
ஓய்வை தருகிறேன்
ஔடதம் பருகென
தலை பதிக்கும் திண்டுதனில்
தஞ்சம் நறுவீயின் விழி மூடிய படி.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# இங்கே தேவை

அழுகை
அவமானம்
தவிப்பு
வெறுப்பு
ஏக்கம்
ஏமாற்றம்
இவையெல்லாம் கடந்து செல்ல
பயணத்தின்
சன்னல் கம்பிகள்
தேவைதான் படுகின்றது.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# துர்க்குணமே தூரப்போ

காரிருளில் கானகத்திடையே
காணாமல் போனதொரு
காலடிச்சுவடாய்
இதய ஓலம்

வலிகளோ விழிகளுக்குள்
ஈரத்தை களஞ்சியப்படுத்தி
வார்த்தைகளை
உறிஞ்சிக் கொள்கின்றன.

துரோகத்தின் வடுக்களில்
களைத்துப் போகும் ஆன்மா
தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காய்
அரும்பாடுபடுகின்றது.

வஞ்சகப் புகழ்ச்சிகளும்
வெஞ்சின வார்த்தைகளும்
ஆறாத ரணங்களை
அள்ளிக்கொட்டுகின்றன.

மனிதமில்லாத உள்ளங்களின்
அழிச்சாட்டியங்களில்
சிக்கிச் சிதைந்து போகின்றன
பல உறவுகள்.



கவிஞர் மக்கொனையூராள்

# இன்னொரு ஜென்மம் வேண்டாம்

அடிக்கடிக் காணாமல் போய்விடுகிறது
அடையாள அட்டைகள்

*

ஒருக் கோடை முடிந்ததும்
பெய்யும் முதல் மழையில்
நனைகிறது.
வெயிலுடன் போராடிய
மண்ணின் போராட்டம்



*

சிறு துளி தான் மழையென்று
இனி யார் சொல்லமுடியும் ?
புறப்பட்டுவிட்டது புது வெள்ளமாய் !

*

பசி மறந்திருக்கும்
ஏழை வீட்டை தட்டி எழுப்பும்
பக்கத்து வீட்டின் குக்கர் விசில் சத்தம் !

*

பூமியின் நிர்வாணத்தை மூட
தன்னை தியாகம் செய்கிறது
வெடிக்கும் பருத்தி செடி !

*

விளை நிலங்களில்
சிறு, சிறிதாக தேங்கிக் கிடக்கும்
விவசாயின் கண்ணீர் !

பூவா, தலையாப் பார்க்க
ஏழை சுண்டிய காசு
போய் விழுகிறது பணக்காரர் வீட்டில் !

*

வாசனை பத்தியின் பூதவுடல்
எரிக்கப் படுகிறது
வீடெங்கும் நறுமணம்

*

இனியொரு ஜென்மம் வேண்டாம்,
பிறக்க விடாமல் தடுக்கும்,
சிசுக் கொலைகள்

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# தேவதையாய் வந்த இவள்

இரவின் மடியில் நான் இருக்க
நினைவெல்லாம் அவள் இருக்க
நித்தமும் மனதில் காதல் கொள்ளையடிக்க
கனவு வந்து நான் கண்விழிக்க
கடிகாரத்தில் நேரம் கடந்து இருக்க
கனவில் வந்து தொல்லை கொடுக்க
நிலவாய் அவள் சிரிக்க
என் நிம்மதி தொலைவாய் தொலைந்து இருக்க
பார்த்து நான் ரசித்திருக்க
பருவ மங்கை அவள் மனதில் நான் நின்று இருக்க
தொலைதூர காதல் பிடித்து இருக்க
முகம் அறியா அவளை நான் நினைத்திருக்க
முதல் கடிதம் வரைந்திருக்க
அவள் முகவரியை நான் தொலைத்திருக்க
பெண்ணே நீ யார் என்று என் இதயம் கேட்டிருக்க
அவள் வெட்கத்தில் முகம் மூடி மறைக்க
கொட்டும் பனி போல் அவள் சிரிக்க
குளிரில் நான் நனைந்து இருக்க
தொடலாம் என நான் நினைக்க
அவள் நிழலாய் மறைந்து இருக்க
கற்பனையில் நான் மிதக்க
இரவில் மடியில் தவழ்ந்திருக்க
கவிதையை நான் வடிக்க
சிற்பியாய் அவள் இருக்க
என் இதயத்தை செதுக்கி அவள் முகம் பதிக்க
பகலெல்லாம் அவளை நான் ரசித்திருக்க
இரவெல்லாம் அவள் சிந்தனையில் நான் மூழ்கியிருக்க
சித்திரமாய் அவளை நான் வடித்து இருக்க
என் விழியில் அவளை சிறைபிடிக்க



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# வீரம் விளைந்த மண்

தொன்மை தொட்ட
மூத்ததமிழ் விளைந்து
மூவேந்தர் போற்றியே
ஆண்ட வீரமண்



முறத்தால் புலியை
முயன்று வென்றிட்ட
அச்சமில்லா ஆணிவேர்கள்
ஆற்கொண்டு முளைத்தமண்

நெஞ்சுரம் கொண்டு
நெருப்பாய் எரிந்து
நெறிமுறைகள் எடுத்துரைத்து
நெற்றிக்கண் திறந்தமண்

அநீதிஉடைத்து கணவனுக்காய்
நீதிகண்ட கண்ணகி
வாளோடு போர்தொடுத்த
மறத்தமிழச்சி வேலுநாச்சியார்

தாய்நாட்டிற்காக
தன்னைஅர்ப்பணித்து
குருதிக்கடல் ஓடவிட்டமண்
ஆணும் பெண்ணும்
ஆற்றலோடு ஆவிதுடித்தமண்

புறமுதுகு காட்டாது
பகைவனைச் சாய்த்திட
துச்சமில்லாது துணிந்து
துணாக்கிய உரமண்

பாரே வியந்திட
பாய்ந்திட்ட வேங்கைகள்
மறத்தோடு மறத்தமிழன்
மார்த்தட்டி நின்றமண்

வீரம் விளைந்து
வீறுகொண்ட மண்
ஆறாத புண்ணோடு
நாளைய விடியலுக்காய்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# பிங்கலி வெங்கய்யா

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து ஆறாமாண்டு
ஆகத்துத் திங்கள் இரண்டாம் நாளன்று
ஆந்திர மாநிலம் மசூலிப் பட்டினத்தின்
பத்லமெனுமரு என்கின்ற ஊரினிலே உதித்தவர்தான்
இந்திய தேசியக் கொடியை வடிவமைத்த
பிங்கலி வெங்கைய்யா ! இந்திய சுதந்திரப்
போராட்ட வீரரவர்! காந்தியின் ஆதரவாளரவர்!
மசூலிப் பட்டினத்தில் மேனிலைப் படிப்பும்
உயர் கேம்பிரிட்ஜ் பட்டந்தனை கொழும்பிலும்
பெற்றாரே! ரயில்வேகார்டு, பிளேக்நோய் ஒழிப்புத்
துறையினில் ஆய்வாளரெனப் பணிகளைத் தொடர்ந்தாரே!
லாகூர் ஆங்கிலோ-வேத உயர்நிலைப் பள்ளியிலே
உருது, ஜப்பான் மொழிகளைக் கற்றிட்டார்!
இந்தி, ஆங்கிலமும் நன்கறிந் திருந்தாரே!
நிலவியல், விவசாய அறிவியலில் மிக்கார்வம்
கொண்டிருந்தார்! ஆந்திரத்தில் வைரச் சுரங்கம்
தோண்டுவதில் சாதனை படைத்ததினால் அவரும்
வைரம் வெங்கைய்யா என்றழைக்கப் பட்டாரே!
காக்கிநாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்
பாரததிற்கென்று ஒருகொடி வேண்டுமென்ற இவரின்
விருப்பத்தை ஏற்றிட்டார் காந்தியோ இவரிடமே
பொறுப்பை ஒப்படைத்தார்! ஐந்தாண்டுகள் ஆய்வின்பின்
தேசியக்கொடியின் முப்பது மாதிரிகளை வெளியிட்டார் !
விஜயவாடா மாநாட்டில் சிவப்பு பச்சை நிறங்களுடன்
அறிமுகம் செய்தார் கொடியொன்றை! அமைதியைக்
குறிக்கின்ற வெண்மை நிறத்தை காந்தியதில்
சேர்த்தாரே! ஜலந்தரைச் சேர்ந்த ஹன்ஸ்ராஜ்
அசோகச் சக்கரத்தைக் கொடியில் சேர்த்திட
ஆலோசனை அளித்தாரே! அதன்படியே பிங்கலிவெங்கைய்யா
மூவர்ணக் கொடியினை வடிவமைத்துத் தந்தாரே!
சுதந்திரத் திருநாளில் கொடியேற்றி வணங்கையிலே
கொடியினை வடிவமைத்த அன்னாரை நினைப்போமே!




**கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி**

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

## கட்டுரை

### செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா
### 31.08.1896 - 04.02.1985



**சிறப்பு**

'தமிழ்த் தாத்தா' என்றதும் உவேசா நினைவுக்கு வந்துவிடுகிறார். 'தமிழ் இலக்கணத் தாத்தா'வான மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை பற்றி இன்றைய தலைமுறைக்கு அறிமுகமில்லாமல் போனது துரதிர்ஷ்டம்.

**வாழ்க்கை**

மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை சென்னை, சைதாப் பேட்டை மேட்டுப்பாளையத்தில் 31.08.1896 ல் பிறந்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்ற மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் எழுதுவதிலும் இணையற்றவர்.

சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக 1920-ல் பணியில் சேர்ந்த மே.வீ.வே., 1923 வரையிலும் அங்கு பணியாற்றினார். புரசைவாக்கம் பாப்ரிசியஸ் பள்ளியில் 1938 வரையிலும் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். ஆசிரியர் பணியிலிருந்து விலகிய மே.வீ.வே., சொந்தமாகப் புத்தகங்களை எழுதி பதிப்பிக்கத் தொடங்கினார். அவர் எழுதிய நூல்கள் பள்ளி மாணவர்களுக்கான பாட நூல்களாகப் பரிந்துரைக்கப்பட்டன. அவரது இலக்கண தேர்ச்சியைப் பதிப்பாளர்களும் பயன்படுத்திக்கொண்டார்கள். தமிழறிஞர்கள் பலர் தங்களது நூல்களைப் பதிப்பிக்கும் முன்னர் அவரிடம் அளித்து செப்பம் செய்துகொண்டனர்.

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

## நூல்கள்




இறையனார் அகப்பொருள்,தொல்.சொல் (நச்சர் உரை), தஞ்சைவாணன் கோவை,வீரசோழியம், நளவெண்பா அஷ்டபிரபந்தம்,யாப்பருங்கலம் காரிகை, யசோதர காவியம் முதலியவை மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை தாமாக முயன்று பதிப்பித்த நூல்கள்.

இலக்கண உலகில் இவர் பதிப்பித்த யாப்பருங்கலக்காரிகை இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது. இதற்கு இணையான ஒரு பதிப்பு இன்றுவரை இல்லை என்றே கூறலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை மீள்பதிப்பு செய்துள்ளது. இவர் பதிப்பாளராக மட்டுமன்றி படைப்பாளராகவும் இருந்துள்ளார்.

பத்திராயு(அ) ஆட்சிக்குரியோர்,திருக்கண்ணபிரானார் அற்புத விளக்கு ,குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு, அரிச்சந்திர புராணச் சுருக்கம், அராபிக்கதைகள் முதலியன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அம்பலவாணன்,இளங்கோவன் என்னும் இரு புதினங்களையும் படைத்துள்ளார்.

## சிந்தாமணிச்செல்வர்

மொழி செப்பமாக இல்லாவிட்டால் கருதிய எச்செயலும் கருதியபடி நடவாது என்பதை உணர்ந்த மே.வீ.வே. மொழியில் பிழை நேராதபடி எச்சரிக்கையுடன் செயல்பட்டுள்ளார்.காஞ்சிபுரத்தில் "கச்சித் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவி பலருக்கும் தமிழ் உணர்வை ஊட்டினார்.அத்துடன் சீவகசிந்தாமணி குறித்து நெடியதோர் சொற்பொழிவாற்றினார். அதனால்தான் திரு.வி.க. "சிந்தாமணிச்செல்வர்" என்னும் பட்டமளித்து இவரைப் பாராட்டினார்.

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

பட்டமும் புகழும்

செந்தமிழ்க்களஞ்சியம் , கன்னித் தமிழ்க்களஞ்சியம், கலைமாமணி ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் மே.வீ.வே.க்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.




கவியரசு கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் எழுதிய "பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே." என்னும் தொகுப்பு நூல் இவரது புகழை இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது.

மறைவு

தமிழ் இலக்கிய உலகில் 89 ஆண்டுகள் வரை உலவிய மே.வீ.வே. 04.02.1985 இறைவனடி சேர்ந்தார்.

நன்றி
https://www.hindutamil.in/


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
ஒரு தவறை செய்தால் ஒத்துக்கொள்ள
தயங்காதீர்கள்!– அவற்றை
சரி செய்து கொள்ள முடியும்–ஆனால்
செய்த தவறை இல்லை என்று
சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை
வாழ்நாளில் சரி செய்ய முடியாது.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com